**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 146** **நாள் : 01.11.2016**

**<u>வடகிழக்கு பருவ மழைக்காலத்தில் சேவை செய்ய ஆர்வமுள்ள தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி வலைதளத்தில் பதிவு செய்துகொள்ளலாம்.</u>**

-------

பெருநகர சென்னை மாநகராட்சி, வடகிழக்கு பருவமழைக்காலத்தில் எடுக்கப்படவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

கடந்த ஆண்டு மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண மையங்கள் அமைக்கப்பட்டு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், தன்னார்வலர்கள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களுடன் இணைந்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் சிறப்பாக செயல்பட்டனர். கடந்த ஆண்டினைப் போன்று தன்னார்வலர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் சேவையினை இந்த ஆண்டும் பயன்படுத்திக்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. மீட்பு மற்றும் நிவாரண உதவிகள் வழங்கும் பணி செய்ய ஆர்வம் உள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் பணியினை ஒருங்கிணைத்து சிறப்பான முறையில் செயல்படுத்த பெருநகர சென்னை மாநகராட்சியின் "www.chennaicorporation.gov.in" என்ற வலைதளத்தில் பதிவு செய்துகொள்ள முடிவெடுக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்துகொள்ளும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியால் மீட்புப் பணிகள் குறித்து சிறப்பு பயிற்சி வழங்கப்படவுள்ளது.

மேலும், மழைக்கால மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட விரும்பும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் / தன்னார்வலர்கள் கீழ்குறிப்பிட்டுள்ள தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் மூலமும் தொடர்பு கொண்டும் பதிவு செய்யலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி (ரிப்பன் மாளிகை) கட்டுப்பாட்டு அறை</u>**

தொலைபேசி – 25384965, 25383694, 25367823, 25387570.

மின்னஞ்சல் (e-mail) gccdm1@chennaicorporation.gov.in,
gccdm2@chennaicorporation.gov.in,
gccdm3@chennaicorporation.gov.in,
gccdm4@chennaicorporation.gov.in,
gccdm5@chennaicorporation.gov.in

**செய்தி வெளியீடு:** **துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**